**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 19.03.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 4 (LW5)

2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 19ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜான்சன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் வாகைவயல் கிராமத்தில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன முனியசாமியை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். சாட்சிகள் காளீஸ்வரி, ஐயம்பெருமாள், உதேஸ்குமார், சித்திரைவேல், ராமு ஆகியோர்களை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. முனியசாமி எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் எதுவும் கேள்விப்படவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Actன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், அப்போது இந்த வழக்கில் இறந்துபோன முனியசாமி மற்றும் ஆஜர் எதிரி ஆகியோர் எனது வீட்டின் அருகில் வசித்து வந்தார்கள் என்றும், அவர்களுக்கு இரு குழந்தைகள் உள்ளது என்றும், மேற்படி முனியசாமி ஆசாரி வேலை செய்து வந்தார் என்றும், அவர் அடிக்கடி பிராந்தி குடித்துவிட்டு வந்து அவரது மனைவியாக ஆஜர் எதிரியிடம் பிரச்சனை செய்து வந்தார் என்றும், அவ்வாறு பிரச்சனை ஏற்படும் சமயங்களில் ஆஜர் எதிரி என்னிடம் வந்துசொல்வார் என்றும், நான் மேற்படி முனியசாமியை கண்டிப்பேன் என்றும், இந்த நிலையில் கடந்த 18.11.2023ம் தேதி எப்போதும்போல் குடித்துவிட்டு வந்து சண்டைபோட்டுக்கொண்டிருந்தார் என்றும், சண்டை போடும் சத்தம்கேட்டு நானும் எனது ஊரை சேர்ந்த சித்திரைவேலு, ராமு ஆகியோர்கள் முனியசாமி வீட்டிற்கு சென்று, முனியசாமியை கண்டித்துவிட்டு வந்தோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

அன்று இரவு சுமார் 11.30 மணியை போல் அவரது வீட்டில் சண்டை சத்தம் அதிகமாக கேட்டவுடன், நானும் சித்திரைவேலுவும் முனியசாமி வீட்டிற்கு சென்று பார்த்தபோது முனியசாமி தலையிலும், நெஞ்சிலும் இரத்தக்காயத்துடன் கீழே விழுந்து கிடந்தார் என்றும், அப்போது ஆஜர் எதிரியான அவரது மனைவி வீட்டை விட்டு பதற்றமாக வெளியே போனார் என்றும், வீட்டில் இருந்த உதேஸ்குமாரிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது, அவரது அப்பா அவரது அம்மா ரொம்ப நேரமாக சண்டைபோட்டதால் அவரது அம்மா அவரது அப்பாவை நீ செத்தால்தான் நான் நிம்மதியாக வாழ முடியும் என்று சொல்லி வீட்டில் இருந்த ஆசாரி வேலை செய்யும் இரும்பு கம்பியை எடுத்து அவரது அப்பாவை மேற்படி கம்பியால் தலையிலும் நெஞ்சிலும் அடித்ததில் கீழே விழுந்துவிட்டதாக என்னிடம் சொன்னார் என நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உடனே நானும் சாட்சி சித்திரைவேலுவும் சென்று பார்த்தபோது, மேற்படி முனியசாமிக்கு வலது மார்புக்கு மேல் இரத்தக்காயமும்,

வலது தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டு பேச்சு மூச்சு இல்லாமல் தரையில் கிடந்தார் என்றும், நான் இது சம்மந்தமாக உடனடியாக மேற்படி முனியசாமியின் தங்கை காளீஸ்வரிக்கு தகவல் சொல்லி, காளீஸ்வரியும், அவரது கணவர் ஐயம்பெருமாளும் மறுநாள் காலை 05.00 மணிக்கு முனியசாமி வீட்டிற்கு சென்று பார்த்தபோது முனியசாமி பேச்சு மூச்சில்லாமல் கிடந்தார் என்றும், உடனடியாக நானும், ஊர்க்காரர்களும் காளீஸ்வரி மற்றும் ஐயம்பெருமாள் ஆகியோர் முனியசாமியை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தோம் என்றும், முனியசாமி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது ஊரை சேர்ந்தவர் என்பதால், அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.த.சா.1 காளீஸ்வரியை எனக்குத் தெரியாது.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .